# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S.No. 53/2023 | Date : 29.04.2026 | DW 1 |
|---|---|---|
| Name: கண்ணன் | த/பெ.அய்யண்ணன் | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும் வாதி சீனிவாசனுக்கும் உள்ள உறவு முறை குறித்தோ தாவா சொத்துக்கள் குறித்தோ மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள முனியப்பன் சாமி சிலை போட்டோவில் உள்ளபடி உள்ளது என்றால்ல சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள முனியப்பன் சிலை என்னுடைய நிலத்தில் நிறுவப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அய்யண்ண கவுண்டர் என்பவர் சுயமாக சம்பாதித்து வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதில் இருந்து எனக்கு 1.90 செண்ட் பூமி எனக்கு தானமாக எழுதி கொடுத்துள்ளார். இன்றுவரை தாவா சொத்து சர்வே எண். 41/2F யில் கூட்டு பட்டா 950 யில் என் பெயரும் வாதி பெயரும் சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 41/2F கூட்டு பட்டாவாக என் தகப்பனார் 2010 ம் ஆண்டு எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதி பிறகு வந்தது. எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி நிலத்தின் நான்கு எல்லைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி நிலத்திற்கு கிழக்கு தெற்கே என்றால் சரிதான். 2010 ம் ஆண்டில் என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டிருந்தாலும் இன்றுவரை சரியான அளவு செய்து தனிப்பட்ட முறையில் பட்டா பெயர் இதுவரை முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி ஒத்துழைக்காததால் இதுவரை நிலத்தை அளவீடு செய்ய முடியவில்லை. வாதி ஒத்துழைக்காததால்தான் நிலத்தை அளவீடு செய்யவில்லை என்று பிராதிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மேட்டூர் அணை கிளை பாரத ஸ்டேட் வங்கியில் காசாளராக பணிபுரிந்து 30.04.2003 ந்தேதி ஓய்வு பெற்றேன். நான் தற்போது சேலத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து இருக்கும் இடத்தில் சொந்த வீடு இல்லை என்றால் சரிதான். நான் விவசாயம் செய்வதற்கு அடங்கல் ஆவணம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய பூமியை ஒட்டிதான் வாதி சீனிவாசனின் முதல் மனைவி கனகவள்ளி பூமி உள்ளது என்றால் சரிதான். சீனிவாசனுக்கும் அவரது முதல்

மனைவி கனகவள்ளிக்கும் எனது தகப்பனார்தான் சொத்து எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பும் நான் பதிலுரையிலும், முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையிலும் சர்வே எண். 41/2F தாவா சொத்தில் முனியப்பன் கோவிலுக்கு கெச்சம்பட்டியில் இருந்து மேச்சேரி செல்லும் தார் சாலை யில் இருந்து கிழ மேலாக 10 அடி தடம் முனியப்பன் கோவில் வரை உள்ளது. நானே நல்லெண்ணத்தின் பேரில் முனியப்பன் கோவிலுக்கு 3000 சதுர அடி நிலத்தை பிரித்துவிட்டு இதர நிலத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணம் எதுவும் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் இன்றுவரை நான் எந்த பயிரும் செய்யவில்லை என்றும் அனுபவிக்க வில்லை என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் இருந்தே நான் என் மனைவி மக்களுடன் இருந்து கொண்டு நான் வேலை காரணமாக வெளியூரில் இருந்ததால் என் பெற்றோர்களை நான் கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவர்களுக்கு பணம் கொடுத்து உதவி செய்துள்ளேன். என் பெற்றோர் இறந்துவிட்டதால் நான் பணம் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணி ஓய்வு பெற்றபின்பு தாவா சொத்தை விற்பதற்காக புரோக்கர்களை அழைத்து வந்து முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/–கண்ணன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.